இனிமையான குழந்தைகளே! தந்தை அநாதைகளை (ஸநாத்) தலைவனினுடையவர்களாக ஆக்குவதற்கு அனைவரையும் துக்கங்களிலிருந்து விடுவித்து சுகதாமத்திற்கு அழைத்துச் செல்ல வந்துள்ளார்.

கேள்வி: கல்ப கல்பமாக தந்தை தனது குழந்தைகளுக்கு எந்த ஒரு ஆறுதல் (தைரியம்) அளிக்கிறார்?

பதில்: இனிமையான குழந்தைகளே - நீங்கள் கவலையற்று இருங்கள். உலகத்தில் அமைதியை நிலை நாட்டுவது, அனைவரையும் துக்கங்களிலிருந்து விடுவிப்பது என்னுடைய வேலையாகும். நான் தான் குழந்தை களாகிய உங்களை இந்த இராவண இராஜ்யத்திலிருந்து விடுவித்து இராம இராஜ்யத்திற்கு அழைத்துச் செல்ல வந்துள்ளேன். குழந்தைகளாகிய உங்களை திரும்ப அழைத்துச் செல்வது என்னுடைய கடமையாகும்.

பாடல்: ஆகாய சிம்மாசனத்தை விட்டு கீழே இறங்கி வாருங்கள் பிரபுவே.. .. ..

ஓம் சாந்தி. குழந்தைகள் பாட்டு கேட்டீர்கள். மீண்டும் வாருங்கள் என்று குழந்தைகளை தங்களுடைய பரமபிதா பரமாத்மாவை நினைவு செய்கிறார்கள். ஏனெனில் மாயையின் நிழல் படிந்துள்ளது. அல்லது இராவண இராஜ்யமாக ஆகியுள்ளது. எல்லோருமே துக்கமே துக்கம் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் எல்லோருமே பதீதமாக (தூய்மையற்றவர்களாக) இருக்கிறோம் என்று கூறுகிறார்கள். எனவே நான் கல்ப கல்பமாக கல்பத்தின் சங்கமயுகத்தில் வருகிறேன் என்று பாபா கூறுகிறார். 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்பேயும் வந்திருந்தேன். மீண்டும் கல்பத்தின் சங்கமயுகத்தில் வந்துள்ளேன். தந்தை வந்து தைரியம் அளிக்கிறார். குழந்தை களே கவலை யற்று இருங்கள். இது என்னுடைய பாகம் ஆகும். பாபா வாருங்கள் வந்து மீண்டும் இராஜயோகத்தைக் கற்பியுங்கள் என்று குழந்தைகள் கூறுகிறார்கள். பதீத உலகத்தை வந்து பாவனமாக ஆக்குங்கள். இச்சமயத்தில் எல்லோரும் அநாதை ஆவார்கள். யாருக்கு தந்தை தாய் இல்லையோ அவர்களுக்கு அநாதை என்று கூறப்படுகிறது. தங்களுக்குள் சண்டையிட்டு கொண்டே இருக்கிறார்கள். எல்லோருமே மிகுந்த துக்கத்தில் இருக்கிறார்கள். முழு உலகத்தில் அசாந்தி இருக்கிறது. எனவே குழந்தைகளை துக்கத்திலிருந்து கரையேற்றி அல்லது இராவணனி னுடைய இராஜ்யத்திலிருந்து விடுவித்து இராம இராஜ்யம், சுகதாமத்திற்கு அழைத்துச் செல்ல வந்துள்ளார். இது என்னுடைய கடமையாகும் என்று தந்தை கூறுகிறார். முழு உலகம் அதாவது அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒரே ஒருவர் தந்தை தான் ஆவார். ஹே! எல்லையில்லாத பாபா, நீங்கள் இப்பொழுது மேலிருந்து சிம்மாசனத்தை விட்டு விட்டு வந்துள்ளீர்கள் என்று எல்லோரும் கூறுகிறார்கள். பிரம்ம மகதத்துவத்தில் இருக்கிறார் அல்லவா? இங்கு இருப்பவர்கள் ஜீவ ஆத்மாக்கள் ஆவார்கள். அது ஆத்மாக்களின் இருப்பிடமாகும். அதற்கு பிரம்மாண்டம் என்று கூறப் படுகிறது. எனவே இந்த நாடகம் சுகம் மற்றும் துக்கத்தினுடையதாகும் என்று தந்தை குழந்தை களுக்குப் புரிய வைக்கிறார். ஹே பரமபிதா பரமாத்மா என்று அழைக்கவும் செய்கிறார்கள். ஏனெனில், துக்க மடைந்து இருக்கிறார்கள். இந்த பாடல் கூட இதன் மீது பாடப்பட்டுள்ளது. குழந்தைகளினுடைய என்ன தவறு ஏற்பட்டுள்ளது? தந்தையை மறந்துவிட்டார்கள். கீதையின் பகவான், யார் சகஜ

இராஜயோகம் கற்பித்தாரோ, அநாதைகளை தலைவனினுடையவராக ஆக்கினாரோ அவரை அறியாமல் உள்ளார்கள். ஹே, அநாதைகளை சநாதராக ஆக்குபவரே என்றும் பாடுகிறார்கள். அநாதையிலிருந்து தலைவராக பாரதத்தை தான் ஆக்குகிறார். பாரதம் தான் சதா சுகமுடையதாக இருந்தது. தூய்மை சாந்தி சுகம் இருந்தது. குடும்ப ஆசிரமமாக இருந்தது. பாரதம் மகான் பவித்திரமாக இருந்தது. 16 கலை சம்பூர்ணம், சம்பூர்ண நிர்விகாரி என்றும் பாடுகிறார்கள். இங்கு எல்லோரும் அநாதை ஆகி விட்டார்கள். ஹிம்சை, அஹிம்சை என்று எதற்கு கூறப்படுகிறது என்பது அவர் களுக்குத் தெரியவே தெரியாது. பசு வதை செய்வது ஹிம்சை என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஒருவர் மீது ஒருவர் காமவாளைச் செலுத்துவது இம்சை என்று தந்தை கூறுகிறார். இராவணன் பிரவேசம் செய்திருக்கும் காரணத்தால் எல்லோருமே தூய்மையற்றவர்களாக (பதீதராக) ஆகி உள்ளார்கள். தேக அபிமானம் முதல் நம்பர் எதிரியாகும் என்று தந்தை கூறுகிறார். பிறகு காமம், கோபம்... .. இந்த 5 விகாரங்கள் உங்களுடைய எதிரியாகும். அவை தான் உங்களை அநாதையாக ஆக்கியுள்ளது. பாரதவாசி குழந்தைகளே, சத்யுகத்தில் நாம் எஜமானராக இருக்கும் பொழுது எவ்வளவு சுகமாக வாழ்ந்தோம் என்பது உங்களுக்கு நினைவிற்கு வருகிறதா என்று பாபா கேட்கிறார். இங்கு யாராவது சரீரம் விட்டார்கள் என்றால் சொர்க்கத்திற்கு சென்றுவிட்டார்கள் என்று கூறுகிறார்கள். நரகத்திலிருந்து சென்றார் அல்லவா? எனவே பாரதம் இச்சமயத்தில் நரகமாக உள்ளது என்று புரிய வைக்க வேண்டும். இதற்கு பயங்கரமான நரகம் என்று கூறப்படுகிறது. கருட புராணத்தில் கதைகள் இருக்கின்றன. வேறு எந்த நதியும் கிடையாது. விகார கடலில் மூழ்கி எழுந்து கொண்டே இருக்கிறார்கள். ஒருவரையொருவர் கொன்று துக்கப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது துக்கம் மற்றும் சுகத்தின் நாடகம் அமைக்கப்பட்டுள்ளது என்று தந்தை வந்து புரிய வைக்கிறார். மற்றபடி இப்பொழுதே நரகம் இப்பொழுதே சொர்க்கம் என்பதல்ல. யாரிடம் நிறைய செல்வம் இருக்கிறதோ அவர்கள் சொர்க்கத்தில் இருக்கிறார்கள் என்பதல்ல. செல்வந்தர்கள் கூட துக்கமடைகிறார்கள். இச்சமயம் முழு உலகமே துக்கத்தில் வீழ்ந்துள்ளது. உங்களுடைய தலைவன் தாய் தந்தை ஆவார்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். அவரைத் தான் நீங்கள் தந்தையும் நீயே, தாயும் நீயே! என்று பாடுகிறீர்கள். மனிதர்களுக்கு தெரியவே தெரியாது. இலட்சுமி நாராயணருக்கு முன்னால் கூட தந்தையும் நீயே, தாயும் நீயே! என்பார்கள். இராதை கிருஷ்ணருக்கு முன்னாலும் தந்தையும் நீயே தாயும் நீயே என்பார்கள். ஏனெனில் தந்தையையே அறியாமல் இருக்கிறார்கள். படைப்பவரான தந்தை மற்றும் அவரது படைப்பை அறியாமல் உள்ளார்கள். இது சிருஷ்டியின் சக்கரம் ஆகும். மாயையின் சக்கரம் என்று கூற மாட்டார்கள். மாயை என்று 5 விகாரங்களுக்குக் கூறப்படுகிறது. பணத்திற்கு செல்வம் என்று கூறப்படுகிறது. செல்வந்தர் ஆவீராக, நீண்ட ஆயுள் உடையவர் ஆவீராக, புத்திரப்பேறு உடையவர்களாக ஆவீராக.. .. .. இந்த ஆசீர்வாதத்தை தந்தை தான் அளிக்கிறார். மற்றபடி அவர்கள் எல்லோருமே பக்தி மார்க்கத்தின் குருக்கள் ஆவார்கள். ஞானக் கடல் ஒரே ஒருவர் ஆவார். அவரைத் தான் பாடுகிறார்கள். கீதையைக் கூறி, பிறகு ஸ்ரீகிருஷ்ண பகவானின் வாக்கியம் என்று கூறி விடுகிறார்கள். அடே கிருஷ்ணர் எப்படி பகவான் ஆக முடியும்? மேலே இருப்பவரைத் தான் ரூபம் மாறி வாருங்கள் என்று கூப்பிடுகிறார்கள். ஆத்மாக்களாகிய நீங்கள் ரூபம் மாறுகிறீர்கள். தந்தையும் மனித உடலில் தான் வருவார் அல்லவா? எருதுவின் மீது வர மாட்டார். பாபா நீங்களும் எங்களைப் போல ரூபம் மாற்றி மனித

உடலில் வாருங்கள் என்று நீங்கள் கூறுகிறீர்கள். நான் ஒன்றும் எருது அல்லது மீன், ஆமையில் வருவதில்லை. முதன் முதலில் மனித படைப்பு பிரஜா பிதா பிரம்மா மூலமாக படைக்கப்படுகிறது. எனவே இரண்டு தந்தையர் ஆகிறார்கள் - ஒன்று பரமபிதா பரமாத்மா சிவன் அவருக்கு தான் ஹே அநாதை களை சநாதராக (தலைவன் உடையவராக) ஆக்கக் கூடிய பாபா வாருங்கள் என்று கூறுகிறார்கள். பிறகு ஞான சூரியன் வெளிப்பட்டார்.... ஆவார். இந்த நாடகத்தை புரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? பாரதத்தின் மீது தான் இந்த நாடகம் உள்ளது. மற்றது உபகாட்சிகள் ஆகும். பாரதத்தினுடைய தேவி தேவதா தர்மம் தான் சிறந்த முதல் நம்பர் தர்மம் ஆகும். தேவதா தர்மம், தேவதா கர்மம் சிரேஷ்டமாக இருந்தது. இப்பொழுது தர்மம், கர்மம் தாழ்ந்ததாக ஆகி விட்டது. முக்கியமான தர்மங்கள் நான்கு என்று தந்தை புரிய வைக்கிறார். எல்லாவற்றையும் விட முதலாவது தேவி தேவதா தர்மமாகும். சத்யுக ஸ்தாபனையின் காரியம் ஒரு தந்தை தான் செய்வார் அல்லவா? அவர் சொர்க்கத்தின் இறைதந்தை ஆவார். நான் கல்பத்தில் ஒரே ஒரு சங்கமயுகத்தில் வருகிறேன் என்று தந்தை கூறுகிறார். நாம் சநாதராக (தலைவனுடைய வராக) ஆகிக் கொண்டிருக்கிறோம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். அநாதைகளை சநாதராக ஆக்குபவர் ஒரே ஒரு தந்தை ஆவார். மனிதர்களோ மனிதர்களுக்கு குறுகிய கால சுகம் தான் அளிக்க முடியும். இது துக்கத்தின் உலகமாக இருக்கின்றது. ஐயோ! ஐயோ! என்று கதறிக் கொண்டே இருக்கிறார்கள். பாரதம் சுகதாமமாக இருந்தது. இப்பொழுது துக்கதாமமாகும். சாந்தி தாமத்திலிருந்து வந்திருக்கின்றோம். இப்பொழுது நாடகம் முடிவடைகிறது. இந்த உடல் பழையதாக ஆகிவிட்டது. இல்லறத்தில் இருந்தபடியே தூய்மையாக ஆக வேண்டும். நான் உங்களுடைய தந்தை. தூய்மையான சொர்க்கத்தை ஸ்தாபனை செய்ய வந்துள்ளேன். முதலில் தூய்மையாக இருந்தார்கள். இப்பொழுது அபவித்திரமாக ஆகி உள்ளார்கள். அரை கல்பம் இராம இராஜ்யம் ஆகும். அரைகல்பம் இராவண இராஜ்யம் ஆகும். இப்பொழுது நீங்கள் ஈசுவரிய மடியில் இருக்கிறீர்கள். இது ஈசுவரிய குடும்பம் ஆகும். பாட்டனார் சிவபாபா ஆவார். பிரஜாபிதா பிரம்மா தந்தை ஆவார். இது உண்மையானதாகும். நிராகார தந்தை பிரவேசம் செய்துள்ளார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். மனித உடலில் வந்துள்ளார். அந்த தந்தை வந்து ஆத்மாக்களிடம் உரையாடுகிறார். அவருக்கு ஆன்மீக மருத்துவர் என்று கூறப்படுகிறது. ஆத்மாவிற்கு இஞ்ஜெக்ஷன் போடுகிறார். ஆத்மாவில் எதுவும் பதிவதில்லை என்று கூறு கிறார்கள். ஆனால் ஆத்மா எப்படி பதிவுகளற்றதாக இருக்க முடியும்? ஆத்மாவில் தான் சம்ஸ்காரம் உள்ளது. அதற்கேற்ப ஜன்மம் எடுக்கிறது. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் பரமபிதா பரமாத்மாவை அறிந்துள்ளீர்கள். ஹே பதீத பாவனரா பரமபிதா பரமாத்மா! நீங்கள் இந்த மனித சிருஷ்டியின் விதை ரூபமாக இருக்கக் கூடிய தந்தை ஆவீர்கள், சைதன்யமானவர், ஞானக் கடல் என்று எல்லோரும் அவரைத் தான் நினைவு செய்கிறார்கள். முழுமையான ஞானம் ஆத்மாவில் உள்ளது. பிறகு சம்ஸ்காரங்களுக்கேற்ப படிப்பின் மூலமாக போய் நீங்கள் இராஜா ஆகிறீர்கள். தந்தையிடமும் ஞானத்தின் சம்ஸ்காரம் உள்ளது அல்லவா? படைப்பினுடைய முதல் இடை கடையினுடைய ஞானம் உள்ளது. உங்களையும் திரிகாலதரிசியாக ஆக்குகிறார். ஆத்மாக் களாகிய நாம் மூலவதனத்திலிருந்து வருகிறோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். பிரம்ம தத்துவத்தை பரமாத்மா என்று கூற முடியாது. தந்தை வந்து கூறும் ஞானத்திற்கு கீதை என்று பெயர்

வைத்துள்ளார்கள். தந்தை தான் வந்து இராஜதானியை ஸ்தாபனை செய்கிறார். வேறு யாரும் இராஜதானியை ஸ்தாபனை செய்வதில்லை. இப்பொழுது இராஜதானி ஸ்தாபனை ஆக வேண்டி உள்ளது. எனவே தூய்மையாக ஆக வேண்டும். இப்பொழுது தந்தை குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானம் அளித்து தூய்மையாக ஆக்கி தலைவனினுடையவர்களாக ஆக்குகிறார். டிராமாவின் வார்த்தையை யாரும் அறியாமல் உள்ளார்கள். இது அனாதி அவினாஷி நாடகம் ஆகும். அனைத்து ஆத்மாக்களுக்கும் அழியாத பாகம் கிடைத்துள்ளது. பரமாத்மாவிற்கும் பாகம் உள்ளது. சிவன் ஒன்றும் இவ்வளவு பெரிய லிங்கம் கிடையாது என்பதை பாபா புரிய வைத்துள்ளார். அவருக்கு பரமபிதா பரமாத்மா என்று கூறப்படுகிறது. ஆத்மாவின் ரூபம் என்ன? நட்சத்திரம், ஒளி, புருவ மத்தியில் பிரகாசிக்கும் அதிசயமான நட்சத்திரம். இவ்வளவு சிறிய ஆத்மாவிற்குள் எவ்வளவு பெரிய பாகம் உள்ளது. அதிசயம் ஆகும் அல்லவா? என்னுடைய ஆத்மாவிலும் பார்ட் இருக்கிறது என்று தந்தை கூறுகிறார். பக்தி மார்க்கத்தில் நான் உங்களுக்கு எவ்வளவு சேவை செய்கிறேன். ஆனால் இச்சமயத்தில் மிகவும் அதிசயமான பாகம் உள்ளது. கல்ப கல்பமாக குழந்தைகளாகிய உங்களுடைய பாகம் இருந்து கொண்டே இருக்கிறது. நடிகர்கள் கூட வரிசைக் கிரமமாக இருப்பார்கள். எல்லோரையும் விட முதலில் இருப்பவர் பாபா. தந்தையிடம் இருக்கும் ஞானத்தை அனைவருக்கும் அளிக்கிறார். குழந்தைகளே, இங்கு இராஜதானி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது என்று தந்தை கூறுகிறார். இப்பொழுது முயற்சி செய்து உயர்ந்த பதவியைப் பெறுங்கள். எந்த சீட் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். பிராப்தி பெறுவதற்காக எல்லையில்லாத தந்தை மூலமாக எல்லையில்லாத சுகத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும். ஜகதம்பாவிற்கு காட்டெஸ் ஆஃப் நாலேஜ் - ஞானத்தின் தேவி என்று கூறப்படுகிறது. எங்கிருந்து ஞானம் கிடைத்தது? பிரம்மாவிடமிருந்து! பிரம்மாவிற்கு யார் கொடுத்தார்? சிவபரமாத்மா! பிரம்மா மூலமாக பிரம்மா குமார் குமாரிகளுக்கு இந்த ஞானம் கிடைத்து கொண்டிருக்கிறது. அந்த பிராமணர்கள் பிறகு இந்த வேள்விக்கு கருவி ஆகிறார்கள். இது ருத்ர ஞான யக்ஞம் என்று கூறப்படுகிறது. இதில் இந்த முழு பழைய உலகம் முடிந்து போய் விடும். பண்டிகைகள் அனைத்தும் இந்த நேரத்தினுடையது ஆகும். சிவனுக்குப் பதிலாக கிருஷ்ண ராத்திரி என்று கூறி கிருஷ்ணருடைய ஜன்மத்தை இரவில் காண்பித்துள்ளார்கள். சிவராத்திரி என்பதன் பொருளைப் புரிந்து கொள்வதில்லை. கலியுகம் என்பது இரவாகும். சத்யுகம் என்பது பகலாகும். இரவில் வந்து பகலாக ஆக்குகிறார். அதுவே சிவஜெயந்தி என்று கூறப்படுகிறது. எல்லையில்லாத இரவு எல்லையில்லாத பகல் ஆகும். இந்த சிவசக்தி சேனை பாரதத்தை சொர்க்கமாக ஆக்கக் கூடியதாகும். பாருங்கள் எவ்வளவு மறைமுகமாக அமர்ந்து கற்பிக்கிறார். யோக பலத்தினால் இராஜ்யம் பெறுகிறார்கள். பழமையான இராஜயோகம் பிரசித்தமானது ஆகும். அதன் மூலம் உலக இராஜ்யம் கிடைக்கிறது. எல்லோரும் பாவனமாக ஆகி விடுகிறார்கள். இந்த ஞானத்தை ஆத்மா தாரணை செய்கின்றது. இங்கு ஆத்மாவினுடைய ஞானம் யாரிட மும் இல்லை. அங்கு ஆத்மாவினுடைய ஞானம் இருக்கும். மற்றபடி பரமாத்மா பற்றிய படைப்பை பற்றிய ஞானம் இருக்காது. இந்த ஞானம் பிராமணர்களாகிய உங்களுக்கு மட்டுமே உள்ளது. நீங்கள் எல்லோ ரையும் விட உயர்ந்தவர்கள் ஆவீர்கள். ஏனெனில் ஆன்மீக சேவை செய்கிறீர்கள். ஒரு பிரயாணி வருகிறார். மணமகள் களாகிய உங்களை

வெண்மையாக (தூய்மையாக) ஆக்குவதற்கு. ஒருவர் பிரயாணி மற்ற எல்லோருமே மணமகள் கள் ஆவார்கள். பிரஜைகள் ஆகக் கூடியவர்கள் அல்லது முக்தி தாமத்தில் வசிக்கக் கூடியவர்களுடைய (மாப்பிள்ளை) ஊர்வலம் மிகப் பெரியதாகும். மணமகன் வருவதே அனைவரையும் அலங்காரம் செய்து அழைத்து செல்ல! எல்லோரும் கொசுக் கூட்டம் போல செல்வார்கள். நல்லது,

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. கலங்கரை விளக்கம் ஆக வேண்டும். ஒரு கண்ணில் சாந்திதாமம் மறு கண்ணில் சுகதாமம் சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இந்த துக்கதாமத்தைப் பார்த்தும் பார்க்காதிருக்க வேண்டும்.

2. தந்தைக்கு சமமாக ஞானத்தில் நிரம்பியவராக ஆகி, எல்லையில்லாத சுகத்தைப் பெறுவதற்காக முழுமையான முயற்சி செய்ய வேண்டும். தங்களுக்கு கிடைத்திருக்கும் ஞானத்தை மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும்.

வரதானம்: அனைத்து பிராப்திகளின் நினைவினால் துயரத்திற்கு விவாகரத்து ù காடுக்கக்கூடிய குஷிகளின் பொக்கிஷங்களால் நிரம்பியவர் ஆகுக.

சங்கமயுகத்தில் அனைத்து பிராமண குழந்தைகளுக்கும் தந்தை மூலம் குஷி என்ற பொக்கிஷம் கிடைத்துள்ளது. ஆகையினால், என்ன நடந்தாலும் - இந்த சரீரத்தையே விட நேர்ந்தாலும் சரி, ஆனால் குஷி என்ற பொக்கிஷத்தை விடக்கூடாது. சதா அனைத்து பிராப்திகளின் நினைவில் இருக்க வேண்டும், அப்பொழுது துயரத்திற்கு விவாகரத்து கிடைத்துவிடும். தொழிலில் நஷ்டமே ஏற்பட்டாலும் மனதில் துயரத்தின் அலை வரக்கூடாது, ஏனெனில், அளவற்ற பிராப்திகளுக்கு முன் இது என்ன பெரிய விசயம்! ஒருவேளை, குஷி இருக் கிறது என்றால் அனைத்தும் இருக்கிறது என்று அர்த்தம், குஷி இல்லை என்றால் எதுவும் இல்லை என்று அர்த்தம்.

சுலோகன்: மாஸ்டர் துக்கத்தைப் போக்குபவர் சுகம் கொடுப்பவர் என்ற நடிப்பை

நடிப்பதற்காக அனைத்து பிராப்திகளாலும் நிரம்பியவர் ஆகுங்கள்.

மாதேஸ்வரி அவர்களின் விலைமதிப்பற்ற மகாவாக்கியம்

குழந்தைகளுக்காக பகவானின் வாக்கு: குழந்தைகளே! இந்த குருவின் வழி, சாஸ்திரங்களின் வழி ஒன்றும் என்னுடைய வழி கிடையாது. இது என்னுடைய பெயரைச் சொல்லி வழி சொல் கின்றார்கள், அவ்வளவு தான். ஆனால், என்னுடைய வழியையோ நானே அறிந்திருக்கின்றேன், என்னை சந்திப்பதற்கான முகவரியையும் நானே வந்து கொடுக்கின்றேன். இதற்கு முன் என்னுடைய முகவரியை வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. கீதையில் பகவான் வாக்கு என்பது உள்ளது, ஆனால், கீதையும் கூட மனிதரால்

சொல்லப்பட்டது. பகவானோ, சுயம் ஞானக் கடல் ஆவார், பகவான் என்ன மகாவாக்கியம் கூறியிருக்கின்றாரோ அதன் நினைவுச்சின்னமாக பிறகு கீதை உருவாகி இருக்கிறது. பரமாத்மா சமஸ்கிருதத்தில் மகாவாக்கியம் கூறினார், அதை கற்றுக் கொள்ளாமல் பரமாத்மாவை அடைய முடியாது என்று இந்த வித்வான், பண்டிதர், ஆச்சாரியர் முதலானோர் கூறுகின்றனர். இதுவோ, இன்னும் அதிகமாக தவறான மதச் சடங்குகளில் மாட்ட வைப்பதாகும். வேதம், சாஸ்திரம் பயின்று ஏணிப்படியில் ஏறினால், பிறகு, அந்தளவு இறங்க வேண்டியதாக இருக்கும், அதாவது அவற்றை மறந்து பரமாத்மாவிடம் புத்தியின் தொடர்பை இணைக்க வேண்டியதாக இருக்கும். ஏனென்றால், இந்த மதச் சடங்குகள், வேத சாஸ்திரங்களைப் பயில்வதால் என்னை அடைய முடியாது என்று பரமாத்மா தெளிவாகக் கூறுகின்றார். பாருங்கள், துருவன், பிரகலாதன், மீரா என்ன சாஸ்திரம் பயின்றார்கள்? இங்கேயோ, படித்த அனைத்தையும் மறக்க வேண்டியதாக உள்ளது. எவ்வாறு, அர்ஜூனன் என்ன படித்திருந்தாரோ, அவற்றை மறக்க வேண்டியதாக இருந்தது. பகவானின் தெளிவான மகாவாக்கியம் என்னவென்றால், சுவாசம் சுவாசம் என்னை நினைவு செய்யுங்கள் என்பதாகும். இதில் எதையும் செய்வதற்கான அவசியம் இல்லை. எதுவரை இந்த ஞானம் இல்லையோ, அதுவரை பக்திமார்க்கம் நடக்கிறது. ஆனால், ஞானத்தின் தீபம் சுடர்விடுகிறது என்றால் மதச் சடங்குகளின் பழக்கம் விலகிவிடுகிறது. ஏனென்றால், மதச் சடங்குகள் செய்து, செய்து ஒருவேளை சரீரம் விட்டுவிட்டால் இலாபம் என்ன கிடைக்கும்? பிராப்தி ஒன்றும் உருவாகியிருக்காது. மதச் சடங்குகளின் கணக்கு வழக்கிலிருந்து முக்தி கிடைக்கவில்லை. பொய் பேசக்கூடாது, திருடக் கூடாது, எவருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது என்று மக்கள் புரிந்துள்ளனர், இவை நல்ல கர்மம் ஆகும். ஆனால், இங்கேயோ, சதா காலத்திற்காக கர்மங்களின் சிக்கலில் இருந்து விடுபட வேண்டும் மற்றும் விகர்மங்களின் வேரை அகற்ற வேண்டும். நாம் இப்பொழுது நல்ல கர்மங்களின் மரம் துளிர்க்கும்படியாக, அப்பேற்பட்ட விதை விதைக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். ஆகையால், மனித வாழ்வில் தன்னுடைய காரியத்தை அறிந்து சிரேஷ்டமான கர்மம் செய்ய வேண்டும். மற்றபடி, பரமாத்மாவை யார் எந்தளவிற்கு அறிந்து கொள்வார்களோ, அந்தளவே நெருக்கத்தில் வருகின்றார்கள். இந்த அனைத்து இரகசியங்களையும் ஆகாயம், பாதாளத்திற்கு அப்பால் உள்ள பரபிரம்மத்தில் இருக்கக் கூடிய பரமாத்மா வந்து சொல்கின்றார். நல்லது.